
அருளோசை

திருவள்ளுவர் ஆண்டு 2004
கார்த்திகை
1973 நவம்பர்



திருக்கார்த்திகை

திரு. க. கலியாணம், எம்.ஏ., டிப். எக்கான்.

தமிழ்நாட்டில் நடைபெறும் விழாக்களில் கார்த்திகை மாதம் வரும் திருக்கார்த்திகையும் ஒன்று. இது வைகுண்டஏகாதசி, மகாசிவராத்திரி, கந்தசஷ்டி போன்று விரதமாகவும் கொண்டாடப் பெறுகிறது. அரியும் அயனும் தாமே முதற் கடவுள் என்று தமக்குள் வாதிட்டனர். சிவ பெருமான் ஒரே அனல்பிழம்பாய் நீண்டு நின்ருன். பிரமன் அன்னமாக சோதியின் முடியையும், திருமால் வராகமாக அடியையும் தேடினர். காணமுடியாது வருந்தினர். இறைவன் திருவுளமிரங்கி அவர்களுக்கு திருவுருக்காட்சி நல்கினன். இதைப்பற்றி பாஸ்கர சங்கிதை, இருக்கு வேதம், சரபஉபநிடதம் முதலிய வடமொழிநூல்களில் கூறப்பெற்றிருக்கிறது. வில்லிபுத்தூரார் பாரதத்தில் "ஓர்ஏனம் தனைத்தேட ஒளித் தருளும் இருபாதத்தொருவன்" என்றும், மணிவாசகர் "எங்கள் பெருமான் பாதமிரண்டும் வினவில் பாதாள மேழினுக்கப்பால் சோதிமலிமுடி சொல்லில் சொல்லிறந்துநின்ற தொன்மை" என்றும் கூறியிருக்கின்ருர்கள்.

பஞ்சபூதங்களில் அக்கினியே சிறந்தது. நிலம், நீர், தீ, வளி, வான், சூரியன், சந்திரன், ஆன்மா ஆன எட்டிலும் இறைவன் அட்ட மூர்த்தங்களாக விளங்குகிருன். அவற்றில் அக்கினி நான்கு மூர்த்தங்கள். அவை தீ, சூரியன், சந்திரன், ஆன்மா என்பன. "எரியலால் உருவமில்லை", 'பாசுபதாபரஞ்சுடரே', 'சோதியுட்சோதி' 'அலகில் சோதியன் என்று திருமுறைகளில் காணப்பெறுகின்றது.

ஆண்டுதோறும் கார்த்திகைமாதக் கார்த்திகை நட்சத்திரத்தன்று எல்லா ஆலயங்களிலும், வீடுகளிலும் விழாக் கொண்டாடப்படுகிறது. திருவண்ணுமலையில் இது மிகவும் சிறப்பாகக் கொண்டாடப் பெறுகிறது. இங்கு மலைஉச்சியில் ஏற்றிய தீபம் பலநாட்கள்வரை வெகுதூரம் தெரிவது நாம் கண்கூடாகக் காணுர்காட்சி பண்டைக்காலத்திலிருந்து இவ் விழா நடந்திருக்கிறது. தொல்காப்பியத்தில் 'வேலிநோக்கிய விளக்கு' என்றும், சிந்தாமணியில் "கார்த்திகை விளக்கிட்டன்ன" என்றும், கார்நாற்பதில் "நலமிகு கார்த்திகை நாட்டவரிட்ட தலைநாள் விளக்கு" என்றும், களவழிநாற்பதில் 'கார்த்திகைச்சாற்றிற்கழி விளக்கு' என்றும் சம்பந்தர் தேவாரத்தில் "தையலார் கொண்டாடும் விளக்கீடு காணுதேபோதியோ பூம்பாவாய்" என்றும் கூறப்பெற்றிருக்கிறது. 'மலைவிளக்கு' 'குன்றின்மேலிட்ட தீபம்' என்ற பழமொழிகளே போதிய சான்று. கார்த்திகை என்ற நட்சத்திரத்தின் பெயரே இந்த மாதத்திற்கு அமைந்திருப்பது தனிச் சிறப்புடையதன்ருே!

குறிப்பு: 8-12-73 அன்று வரும் அண்ணுமலையார் திருக்கார்த்திகைத் தீபத்தையொட்டி இது வெளியிடப்பெறுகிறது.

அருளோசை

திங்களிதழ்

ஆனைமுகன் ஆறுமுகன் அம்பிகை பொன்னம்பலவன்
ஞானகுரு வாணியை உள் நாடு.

மணி 2	பிரமாதீச கார்த்திகை 1973 நவம்பர்	ஓசை 5

அருளோசை அன்பர்களுக்கு வணக்கம்

"மாநாட்டுச் சிறப்பு மலரைப்" பாராட்டிப் பல அன்பர்கள் கடிதம் எழுதியுள்ளனர். தற்காலச் சூழ்நிலையில் இதுபோன்ற மாநாடுகள் மட்டுமே சமயப் பற்றுள்ளவர்களுக்கு எழுச்சியைக் கொடுக்கும் என்றும், பிறரைச் சிந்திக்க வைக்கும் என்றும் எழுதியுள்ளனர். இது பேரவையின் சமயத் தொண்டிற்கு நாளுக்கு நாள் மக்களிடையே பெருகிவரும் நல்லாதரவையே காட்டுகிறது. பேரவை இதுபோன்ற மாநாடுகளை ஆண்டிற்கு ஒருமுறையாவது நடத்த வேண்டும் என்ற கருத்துக் கொண்டிருக்கிறது. அடுத்த மாநில மாநாடு இன்னும் சிறப்பாக அமைய, சமயப்பற்றுள்ள அன்பர்கள் பேரவையோடு நேரடித் தொடர்பு கொண்டும், மாவட்டங்களிலுள்ள முதன்மைச் சமயப்பரப்புநர்கள் மற்றும் சமயப்பரப்புநர்களோடு தொடர்பு கொண்டும் அன்பர்களைத் திரட்டிச் சங்கங்கள் அமைத்து பேரவையின். திருத்தொண்டிற்குத் துணை நிற்க வேண்டுகிறோம்.

"அருளோசை" சந்தாதாரர்கள் பலர் இன்னும் தங்கள் சந்தாவைப் புதுப்பிக்கவில்லை. சந்தா முடிந்தவர்களுக்குத் தனித்தனியே அஞ்சலட்டை மூலம் தெரிவிக்கப்படும். அவர்கள் உடனடியாக ரூ. 5/- அனுப்பித் தங்கள் சந்தாவைப் புதுப்பித்துக் கொள்ள வேண்டுகிறோம்.

பல அன்பர்கள் இதழ் வரவில்லை என எழுதுகின்றனர். அப்படி எழுதுகிறவர்களும், முகவரி மாற்றத்தைத் தெரிவிப்பவர்களும் பெரும்பாலும் தங்கள் சந்தா எண்ணைத் தெரிவிப்பதில்லை. எனவே இதழ் வரவில்லை என எழுதுபவர்களும், முகவரி மாற்றத்தைத் தெரிவிப்பவர்

களும், சந்தாவைப் புதுப்பித்துக் கொள்கின்றவர்களும் தவருது தங்கள் சந்தா எண்ணைக் குறிப்பிட வேண்டும். அப்படித் குறித்தனுப்பினுல் உடனடியாக ஆவன செய்யத் துணையாக இருக்கும்.

அன்பர்கள் எங்களோடு ஒத்துழைத்துப் பேரவையின் சமயத் தொண்டிலும் அருளோசையின் வளர்ச்சியிலும் எங்களுக்குப் பெரிதும் துணை நிற்பார்கள் என நம்புகிருேம்.

அ. நாராயணசுவாமி, பி.ஏ.,
பதிப்பாசிரியர்.

அட்டையில் :

அண்மையில் மிகச் சிறப்பாகத் திருக்குட நன்னீராட்டு நடைபெற்ற பழநி, அருள்தரு தண்டாயுதபாணி.

இந்த இதழில்



திருக்கச்சி ஏகம்பம்

திரு. கே. எஸ். நரசிம்மன், பி.ஏ., பி.எல்., ஐ.ஏ.எஸ்.,
ஆணையர், அறநிலையத்துறை, சென்னை.

தமிழ்நாட்டிலுள்ள தலங்களிலும் நகரங்களிலும் தலைசிறந்த தொன்ருகத் திகழ்வது காஞ்சிபுரம். "கல்வியிற் கரையிலாத காஞ்சிமா நகர்" என்றும், "முத்தி தரும் நகரேழுள் முதன்மையதாம் காஞ்சிநகர்" என்றும், சான்ருேர்கள் இதனைப் போற்றியுள்ளனர். இத்தகைய சிறப்புமிக்க காஞ்சிபுரத்தில், எத்தனையோ பற்பல கோயில்கள் அமைந்துள்ளன. அவைகளுள் சிறப்புமிக்க தொன்ருகத் திகழ்வது ஏகாம்பரநாதர் கோயில் ஆகும்.

மாணிக்கவாசகப் பெருமான் இக்கோயிலைத் "தேசம் எல்லாம் புகழ்ந்தாடும் கச்சித் திருவேகம்பன் செம்பொற்கோயில்" எனப் போற்றிப் புகழ்ந்துள்ளார். தேவாரத் திருமுறைகளில், இது திருக்கச்சி ஏகம்பம் எனச் சிறப்பித்துக் குறிக்கப்பட்டுள்ளது. திரு என்பது அடைமொழி. கச்சி என்பது காஞ்சிபுரம். ஏகம்பம் என்பது, ஏகாம்பரம் என்பதின் திரிபு. ஏகாம்பரம் (ஏகம்+ஆம்பரம்) என்பதற்கு, ஒற்றை மாமரம் என்பது பொருள். இத்தலத்தில் வேதங்களே ஒரு பெரிய மாமரமாகத் தோன்றி வளர்ந்துள்ளன என்பது ஐதிகம். அந்தப் பெரிய ஒற்றை மாமரத்தின் கீழ்ச் சிவபெருமான் எழுந்தருளி விளங்குகின்ருர். ஆதலின் அவருக்கு ஏகாம்பரநாதர் என்று பெயர் ஏற்பட்டது.

ஏகாம்பரநாதர், கருவறையில் புற்றுவடிவில் மணலால் அமைந்த மூர்த்தியாக எழுந்தருளியிருக்கின்ருர். ஆதலின் அவருக்கு நீராட்டுச் செய்யப்படுவதில்லை. புனுகுசட்டம் மட்டுமே சாத்தப்பெறும். திருவாரூரைப் போலக் காஞ்சிபுரமும் பிருதிவித் தலமாக விளங்குதற்கு இஃது அடையாளமாகத் திகழ்கின்றது. கச்சி ஏகம்பத்தின் மூலத்தானமாகிய கருவறையில் ஏகாம்பரநாதர், அம்பிகை தம்மைத் தழுவி இருக்கும் கோலத்தில் காட்சியளிக்கின்ருர். அதனுல் "தழுவக் குழைந்தார்" என்பதும், ஏகாம்பரநாதருக்கு ஒரு பெயராகும்.

ஒரு சமயம் சிவபிரானும் அம்மையும் திருக்கயிலேயில் எழுந்தருளி யிருந்த போது, அம்மை விளையாட்டாகச் சிவபிரானின் கண்களே மூடினுள். சூரியனும் சந்திரனுமே சிவபிரானின் கண்களாகத் திகழ்தலின் அக்கண்களே மூடியபொழுது உலகமெல்லாம் ஒளி இழந்து இருள் அடைந்து விட்டது. அதனுல் உயிர்களெல்லாம் பெரும் துயருற நேர்ந்தது. அங்ஙனம் உலகில் உள்ள உயிர்களேயெல்லாம் துன்புற வைத்த குற்றம் தீரும்படி, காஞ்சிபுரம் சென்று தம்மைப் பூசிக்குமாறு அம்மையார்க்குச் சிவபிரான் கட்டளேயிட்டருளினுர். அதன்படி அம்மை காஞ்சிபுரம் போந்து, மணலால் இலிங்கம் அமைத்து, சிவபெருமானே வழிபடும்போது, சிவபெருமான் கங்கையாற்றைக் காஞ்சியில் கம்பா நதியாகப் பெருகும்படி பணித்தருள, அவ்வாறே கங்கை, கம்பா நதியாகப் பெருகி வருதலேக் கண்டு, அவ்வெள்ளம் எங்கே தான் அமைத்து வழி படுகின்ற மணல் இலிங்கத்தை அழித்து ஈர்த்துச் சென்று விடுகின்றதோ என்று, அம்மை அஞ்சி நடுக்கம் (கம்பம்) கொண்டு, அவ்விலிங்கத்தை அணேத்துத் தழுவிக் கொண்டனள்.

அம்மையைக் கம்பம் (நடுக்கம்) கொள்ளும்படிச் செய்ததனுல், இத்தலத்திற்குக் கம்பம் எனப் பெயரமைந்தது. திருஞானசம்பந்தர் காஞ்சியில் பாடிய திரு இயமகப் பதிகத்தில்,

"காய வில் மதன் பட்டது கம்பமே,
கண்ணுதற் பரமர்க்கு இடம் கம்பமே"

என்று அருளிச் செய்திருத்தல் காணலாம்.

அம்பிகை காஞ்சியில் மணலால் இலிங்கம் அமைத்து வழிபட்டதும், அப்போது கங்கைநதி கம்பை நதியாக வெள்ளப்பெருக்கெடுத்து ஓடி வந்ததும், "ஏலவார் குழலாள்" என்னும் பெயரையுடைய காமாட்சி யம்மை சிவபிரானே அணேத்துத் தழுவிக் கொண்டதும், ஆகிய தல வரலாற்றுச் செய்திகள்,

"எள்கல் இன்றி இமையவர் கோனே
ஈசனே வழிபாடு செய்வாள்போல்
உள்ளத் துள்கி உகந்து உமைநங்கை
வழிபடச் சென்று நின்றவா கண்டு
வெள்ளம் காட்டி வெருட்டிட, அஞ்சி
வெருவி ஓடித் தழுவ வெளிப்பட்ட
கள்ளக் கம்பனே எங்கள் பிரானேக்
காணக்கண் அடியேன் பெற்ற வாறே"

எனவரும் சுந்தரர் தேவாரத்தில், சிறப்புறக் குறிக்கப்பட்டிருத்தல் காணலாம்.

ஏகாம்பரநாதர் கோயிலிற்கு நான்கு திசைகளிலும் கோபுரங்கள் உண்டு. அவற்றில் தென்திசைக் கோபுரம் மிகப்பெரியதும், அழகியதும் ஆகும். மதில்களும் உயரமானவை. கோபுரவாயிலின் இருபக்கங்களி லும் முறையே கணபதியும், முருகனும் பெரிய வடிவில் எழுந்தருளி

யுள்ளனர்; கோபுர வாயிலைக் கடந்ததும், முதற் பிராகாரத்தின் இடப் பக்கத்தில் ஒரு குளம் உள்ளது. அதுவே கம்பாநதி எனப்படுகின்றது. அதற்கு அருகே பழமை வாய்ந்த ஆயிரக்கால் மண்டபம் சிறிது பழுதடைந்த நிலையில் உள்ளது. அவ் ஆயிரக்கால் மண்டபக் கோபுரத்தின் கீழ்த் தலவிநாயகர் ஆகிய விகடசக்கர விநாயகர் அமர்ந்துள்ளார்.

"திகழ்ந்த சக்கரச் செம்முகம் ஐந்துளான்
சகட சக்கரத் தாமரை நாயகன்
அகட சக்கர வின்மணி யாஉறை
விகட சக்கரன் மெய்ப்பதம் போற்றுவாம்"

எனக் கந்தபுராணத்தில் வரும் முதற்பாடல் இவ்விநாயகரைப் பற்றியதே யாகும். இவ் ஆயிரக்கால் மண்டபத்தில்தான், கச்சியப்ப சிவாச்சாரியர் இயற்றிய கந்தபுராணம் அரங்கேற்றப்பட்டது.

மாவடியின் பக்கத்தில் திருமுருகன் சந்நிதி அமைந்திருக்கின்றது. இவரைத்தான் கந்தபுராணத்தில்,

"மூவிரு முகங்கள் போற்றி முகம்பொழி கருணை போற்றி
ஏவரும் துதிக்க நின்ற இராறுதோள் போற்றி காஞ்சி
மாவடி வைகும் செவ்வேள் மலரடி போற்றி அன்னான்
சேவலும் மயிலும் போற்றி திருக்கைவேல் போற்றி போற்றி"

என்று துதிசெய்திருக்கின்றார்.

இவ் ஆயிரக்கால் மண்டபத்தின் மீது, பங்குனி உத்திரத்தில் திருவேகம்பநாதர்க்குத் திருமணவிழா நிகழும் மெத்தை மண்டபம் உள்ளது. அது புகழ்மிக்க வள்ளல் காஞ்சிபுரம் பச்சையப்ப முதலியார் அவர்களால் கட்டப்பெற்றதாகும். இங்குத் திருவேகம்பநாதருக்கு நடைபெறும் பங்குனி உத்திரத் திருமணவிழாவில், அதே வேளையில் அவர்தம் திருமுன்னிலையில் பலர் தத்தம் திருமணத்தைச் செய்து கொள்ளுவர். அச்சிறந்த பழக்கம் தொன்று தொட்டுப் பல நூற்றாண்டுகளாக நடைபெற்று வருகின்றது.

கோயிலின் உட்புற மதிலைக் கடந்து சென்றதும் நீராழி மண்டபத்துடன் திகழும் ஒரு அழகிய திருக்குளம் உள்ளது. இது சிவகங்கை என வழங்கப்படும். கோயில் கொடி மரத்திற்கு அருகே ஒரு சிறு கோயில் உள்ளது. அது திருக்கச்சிமயானம் எனப்படும் வைப்புத் தலமாகும். கோயிற் கருவறையின் உட்பிராகாரத்தில் ஒரு சிறிய பெருமாள் சந்நிதி உள்ளது. அச்சந்நிதியிலுள்ள பெருமாளைத் திருமங்கையாழ்வார் "நீலத் திங்கள் துண்டத் தான்" எனப் புகழ்ந்து போற்றியுள்ளார்.

மாமரத்தின் கீழ் எழுந்தருளியுள்ள சோமாஸ்கந்தர் திருவுருவம், மிக்க அழகிய சிறப்பு வாய்ந்தது. மாவடி அமைந்துள்ள பிராகாரத்தின் கருங்கல் திருப்பணி, மிகமிக அழகும் வேலைப்பாடும் பொருந்தியது. அதன்கண் ஓர் இலிங்கத்திலேயே 1008 இலிங்கங்கள் அமைக்கப்

பெற்றுள்ளன. ஏலவார்குழல் அம்பிகை சந்நிதியும், மாவடி வைகும் திருமுருகன் சந்நிதியும், மிக்க சிறப்பு வாய்ந்தவை. இக்கோயிலிலுள்ள அகஸ்தீசுவரர் மண்டபம், சபாநாதர்-(நடராசர்) மண்டபம் ஆகியவை, சோழர்களால் கட்டப்பட்டவை. வாகன மண்டபம், விசயநகரத்து அரசர்களால் கட்டப்பட்டது. சென்ற நூற்றுண்டில் இக்கோயிலின் திருமதில்கள் மிகவும் பழுது பட்டுச் சிதைந்திருந்தன. அவற்றை மாவட்டத் தலைவராக இருந்த ஆட்சன் (Hodson) என்னும் ஆங்கிலேயர் பழுதுபார்த்துத் திருத்தி அமைத்தார். ஆதலின் அவருடைய நினைவாக ஆடிசன் பேட்டை என ஒரு பகுதி, காஞ்சிபுரத்தில் பெயர் வழங்கப் பெற்று வருகின்றது. இத்திருக்கோயிலைச் சைவ சமய ஆசிரியர்கள் நால்வரும் புகழ்ந்து போற்றிப் பாடியுள்ளனர். சம்பந்தர் நான்கு பதிகங்களும், அப்பர் ஏழு பதிகங்களும், சுந்தரர் ஒரு பதிகமும், இத்தலத்திற்கு அருளிச் செய்துள்ளார்கள்.

தொண்டை நாட்டில், தேவாரப் பாடல்பெற்ற சிவத்தலங்கள் 32 உள்ளன. அவைகளுள் தலைசிறந்ததாக வைத்துத் தொன்றுதொட்டு போற்றப்பெற்று வருவது, திருக்கச்சி ஏகம்பமே யாகும். இதனை அன்பர்கள் அனைவரும் சென்று கண்டு வழிபட்டு மகிழ்ந்து இன்புறுதல் நலம் பயக்கும்.

சண்டேசர்க்கு அருளும் தண்ணளியினர்

புலவர் திரு. ந. ரா. முருகவேள், எம்.ஏ., எம்.ஓ.எல்.

முன்னுரை :

சிவாலயங்களில் ஐங்கடவுளர் (பஞ்சமூர்த்திகள்) புறப்பாடு அல்லது திருவீதிஉலா நிகழும்போது, அவர்களுள் ஒருவராக விளங்குபவர் சண்டேசர் என்பது யாவரும் அறிந்ததொன்று. சண்டேசர், சண்டீசர், சண்டேசுவரர், சண்டிகேசுவரர், சண்டேசுவர நாயனர் எனப் பலவகைகளில் இவருக்குப் பெயர்கள் வழங்கும். எல்லாச் சிவாலயங்களிலும் இவருக்குத் தனியே ஒரு சிறு கோயில் உண்டு. அது கருவறைக்குப் புறம்பே, திருமுழுக்குத் தீர்த்தம் விழும் கோமுகியை அடுத்து அருகில் அமைக்கப்பட்டிருக்கும். கோயிலுக்குச் சென்று நாம் செய்யும் சிவதரிசனமும் வழிபாடும், அவற்றின் இறுதியில் நாம் செய்தற்குரிய சண்டேசுவரர் தரிசனத்துடன் பிரார்த்தனையுடனுமே நிறைவு பெறுகிறது. சண்டேசுவரரைத், தரிசனம் செய்து முடிக்காதபோது, சிவதரிசனம் நிறைவு பெருமையோடு, அதன் பயனும் நமக்குச் சித்திப்பதில்லை என்பது பெரியோர்கள் துணிபு.

திருக்கோயிலுக்குச் சென்று சிவபிரானை வழிபடும் அன்பர்கள், கோயிலை முறையே வலம் வந்து, ஒவ்வொரு மூர்த்தியையும் வணங்கி முடித்துக்கொண்ட பிறகு, சண்டேசுவரர் கோயிலை அடைதல் வேண்டும். கோயிலில் வழிபாட்டின்போது பெற்ற பூமாலை, பரிவட்டம் முதலிய சிவ நின்மாலியப் பொருள்களைச் சண்டேசுவரர் சந்நிதியிற் சேர்த்து, சிவதரிசனப்பலனை அளித்தருளல் வேண்டும் என்று அவரை வேண்டிக் கொண்டு, அங்குப் பெற்ற திருநீற்றை அணிந்து கொள்ளல் வேண்டும் என்பது விதி. சிவபிரானுக்குச் சாத்திய மலர் மாலைகள், ஆடை அணிகலன்கள், நிவேதனம் செய்த உணவுவகைகள் முதலியன, சிவ நின்மாலியங்கள் என வழங்கப்படும். சிவபிரானல் ஏற்றுக் கொள்ளப் பட்டு, நின்மலம் (அழுக்கின்மை, தூய்மை) அடைந்த பொருள்கள், சிவ நின்மாலியங்கள் ஆகும்.

சிவ நின்மாலியங்களைச் சண்டேசுவரர்பால் சேர்ப்பித்தல்வேண்டும் என்று பெரியவர்கள் கூறும் நுட்பம் அறியாமையால், ஒரு சில மக்கள் கோயில்களில் சண்டேசமூர்த்தியின் முன்பு, தமது ஆடைகளின் நூல்

இழைகளை எடுத்துப் போடுகின்றனர். அது பெரும் தவறு. சிவபிரானுக்கு அணிவித்து நின்மாலியமான ஆடைகளையும் மாலைகளையும் மட்டுமே, சண்டேசர்க்குச் சாத்துதல் வேண்டும். சண்டேசர் இடையருத சிவத்தியானத்தில் ஈடுபட்டிருப்பவராதலின், அவருக்கு நம் வருகையையும், வேண்டுகோளையும் தெரிவிக்கும் வகையில், ஓர் அறிகுறியாகவே, நாம் அவர்தம் திருமுன் சென்று நம் கைகளை மெல்லெனத் தட்டுகின்ரேம். இதனை அறியாமல், ஒருசிலர் சண்டேசுவரரைச் "செவிட்டுச் சாமி" என வழங்குவது பெரும் பிழையும் பாவமும் ஆகும்.

திருவானைக்காப் புராணம் :

சிவபூசையின் இறுதியில் நம்மாற் பூசிக்கப்பெற்று, சிவபிரானல் ஏற்றுக்கொள்ளப்பட்ட உணவு நீர் தாம்பூலம், மாலை சந்தனம் ஆகிய தூய அருட்பொருள்களை ஏற்றுக்கொண்டு, நமக்குச் சிவபூசையின் பயனைக் கொடுக்கும் அதிகாரமுடையவர் சண்டேசுவரரேயாவர். இவ்வுண்மையினைக் கச்சியப்ப முனிவர்,

பொன்னங் கடுக்கை முடிவேய்ந்த புனிதர்க் கமைக்கும் பொருளன்றி
மின்னும் கலன் ஆடைகள் பிறவும் வேறு தனக்கென் றமையாமே
மன்னும் தலைவன் பூசனையில் மல்கும் பயனை அடியார்கள்
துன்னும் படிபூ சனைகொள்ளும் தூயோன் அடித்தா மரைதொழுவாம்

எனவரும் திருவானைக்காப் புராணத் துதிப்பாடலிற் குறிப்பிட்டிருத்தல் கொண்டு உணரலாம். சண்டேசர் பூசை செய்யாத வழி, சிவபூசை செய்தும் அதன் பயனை நாம் எய்துதல் இயலாது. அது,

"சண்டனை அர்ச்சித்தவரே சம்புவை அர்ச்சித்த பயன்
கொண்டிடுவர் மற்றையர் கொள்ளார்"

எனவரும் சைவசமய நெறித் திருமொழியால் உணரப்படும். அது பற்றியே சைவசித்தாந்தத்தில் "சண்டேசுவரரை எவ்விடத்தும் எப்போதும் பூசிக்க" என்னும் நியமம் உள்ளது.

கல்வெட்டுச் சிறப்பு :

சிவாலயங்களில் வரவு செலவுக் கணக்குகளைச் சண்டேசுவரர் பெயரினலேயே எழுதுவதுதான் பண்டைக்காலத்து மரபு முறையாக இருந்து வந்தது. இம்மரபுநெறிச் செய்தியினைப் பின்வரும் கல்வெட்டு வெண்பாப் பாட்டல் விளக்குதல் காணலாம் :—

"சண்டீச் சுரன்ஓலை சாகரஞ்சூழ் வையகத்தீர்
கண்டீச் சுரன்கருமம் ஆராய்க! —பண்டே
அறஞ்செய்தான் செய்தான் அறங்காத்தான் பாதம்
திறம்பாமைச் சென்னிமேல் வைத்து."

"கடல் சூழ்ந்த உலகில் வாழும் மக்களே. நமக்கு முற்பட்டுப் பண்டைக் காலத்தில் அறத்தைச் செய்தவன், செய்வித்தவன், செய்த அறத்தைப் பாதுகாத்தவன் முதலியவர்களுடைய பாதங்களைப் பிறழ் வின்றி உங்கள் தலைமேற் கொண்டு போற்றி, இறைவனின் திருப்பணி களை முறைப்படி ஆராய்ந்து செய்து வருவீர்களாக. இது சண்டேசு வரரின் ஆணை ஓலை (கட்டளை)" என்பது மேற்குறித்த கல்வெட்டுப் பாடலின் பொருள்.

இக்கல்வெட்டுப் பாடல், (1) மதுராந்தகம் வட்டம், பெரும்பேறு கிராமம் தான்தோன்றி ஈசுவரர் கோயிலின் முன்மண்டபத்துத் தெற்குச் சுவரிலும்; (2) தஞ்சை மாவட்டம் தஞ்சாவூர் வட்டம் திருக்களாவுடைய மகாதேவர் கோயிலின் வடபுறச் சுவரிலும்; (3) தென்னாற்காடு மாவட்டம் விழுப்புரம் வட்டம் திருவாமாத்தூர் அபிராமேசுவரர் கோயி லின் முன் பிரகாரம் தென்புறச் சுவரிலும்; (4) புதுக்கோட்டை திருமெய்யம் வட்டம் கள்ளம்பட்டி மதீசுவரர் கோயிலின் முன்புள்ள ஒரு கல்லிலுமாகப் பல தலங்களில் செதுக்கப்பெற்றுள்ளது.

அரனார் மகனார்:

சண்டேசுவரர் சிவபிரானுக்கு மகன்மை முறைமையினராக ஆட் கொள்ளப்பெற்றவர் என்பதனை

> "வந்து மிகைசெய் தாதைதாள் மழுவால் துணித்த மறைச்சிறுவர்
> அந்த உடம்பு தன்னுடனே அரனார் மகனார் ஆயினார்"

எனவரும் பெரியபுராணச் செய்யுள் விளக்கும். சிவபிரானுக்குப் பிள்ளை யாகும் பெருமை பெற்றமை பற்றியே, மூத்த பிள்ளையார் (விநாயகர்), இளைய பிள்ளையார் (முருகன்), காழிப்பிள்ளையார் (சம்பந்தர்) என வழங்கும் வரிசை முறையில் வைத்து, சேய்ஞலூர்ப் பிள்ளையார் எனச் சண்டேசுவரர் வழங்கப் பெறுகின்றார்.

தொண்டர் நாயகர்:

சண்டேசுரரே சிவனடியார்கள் அனைவருக்கும் தலைமை உடையவர் ஆவர். தொண்டர்களுக்கெல்லாம் தலைவராக விளங்கும் சிறப்புடைமை பற்றிச் சண்டேசுவரர்க்குத் 'தொண்டர் நாயகம்' என்னும் ஒரு பெயர் உண்டு.

> தாதையைத் தாளறவீசிய சண்டிக்கிவ் அண்டத்தொடுமுடனே
> பூதலத் தோரும் வணங்கப் பொற்கோயிலும் போனகமும் அருளிச்
> சோதி மணிமுடித்தாமமும் நாமமும் தொண்டர்க்கு நாயகமும்
> பாதகத் துக்குப் பரிசுவைத் தானுக்கே பல்லாண்டு கூறுதுமே.

அங்ஙனம் அடியார்களுக்கெல்லாம் தலைவராகத் திகழ்தல் பற்றியே, அடியார்களின் சார்பாளர் (பிரதிநிதி) என்ற முறையில், இறைவனின் திருவீதியுலாவில் சண்டேசுவரரும் கலந்து கொண்டு எழுந்தருளிச் சிறப்பிக்கின்றார்.

சண்டேசர் வரலாறு:

சோழ நாட்டில் மண்ணியாற்றின் தென்கரையில் சேய்ஞலூர் என்று ஒரு சிவத்தலம் உள்ளது. சேய் ஆகிய முருகன், சிவபிரானை வழிபட்ட நல்ல ஊர் ஆதலின், அதற்கு சேய்ஞலூர் (சேய்+நல்+ஊர்) எனப் பெயர் அமைந்தது. அஃது அந்தணர்கள் நிறைந்து வாழும் ஊர். சோழ அரசர்கள் முடிசூடிக்கொள்ளும் ஐந்து (காவிரிப்பூம்பட்டினம், உறையூர், திருவாரூர், சேய்ஞலூர், கருவூர்) நகரங்களுள் ஒன்றாகத் திகழ்வது அது. அதன் கண் காசிபகோத்திரத்தில் எச்சதத்தன் என்ற மறையவன் ஒருவன் இருந்தான். "அருமை மணியும் அளித்ததுவே நஞ்சும் அளிக்கும் அரவுபோல், இருமை விளைக்கும் ஒருவடிவாகிய அவன்." அவனுடைய மனைவி பவித்திரை என்பவள். இவ்விருவருக்கும் விசாரசருமர் என்னும் மைந்தர் ஒருவர் வந்து உதயஞ்செய்தார். "முந்தையறிவின் தொடர்ச்சியினால் முகைத்த மலரின் வாசம்போல்" ஐந்தாண்டு நிரம்பும் முன்னரே, அவர் சந்த மறைகளும், ஆகமங்களும் தகவுற உணர்ந்து தெளிந்தார்.

ஒருநாள் அச்சிறிய பெருந்தகையார், தாம் பள்ளிக்குச் செல்லுங்கால், வழியில் ஓர் இடையன் பசுநிரைகளை அடித்துக் கொடுமை செய்தவனைக் கண்டார். உள்ளம் வருந்தினர். பசுக்களின் அருமை பெருமைகளை அவனுக்கு எடுத்து அறிவித்து, "யானே இனி இந்நிரை மேய்ப்பேன்" என்று கூறி, அப்பசு நிரைகளை மேய்த்து வரத் தலைப்பட்டார். பசுக்கள் நன்கு புல்மேய்ந்து, மடிபெருகிமுலைசுரந்து பால்கறந்து வந்தன. சேய்ஞலூர் மறையவர்கள் அனைவரும் மகிழ்ந்தனர். சில நாட்கள் சென்றன. பசுக்களுக்கு விசாரசருமர்பால் மிகவும் அன்பும் ஈடுபாடும் பெருகின. அவரைக் கண்டாலே, அவைகள் மிகவும் களிகொண்டு அவர்தம் அருகு சார்ந்து, உருகி நின்றன. அன்பின் மிகுதியால் கனைத்துச் சுரந்து கறவாமே பால் பெருகிப் பொழிந்து நின்றன. பசுக்கள் பால்பொழிவதுகண்ட விசாரசருமர்க்கு, அஃது இறைவனுக்குத் திருமஞ்சனம் செய்யப் பயன் படுமே என்னும் குறிப்புத் தோன்றியது. "முன்னை அர்ச்சனையின் அளவில் தொடர்ச்சியால்" மூளும் அன்பு பெருகிய அவர், மண்ணி ஆற்று மணலில் சிவலிங்கமும், சிவாலயமும், கோபுரமும் திருச்சுற்றாலயம் முதலியனவும் வகுத்தார்; விளையாட்டே போலச் சிவாகம முறைப்படி சிவபூசையில் ஈடுபடத் துவங்கிவிட்டார். சண்டேசர் ஆன்நிரை மேய்த்து ஆத்திமரத்தின் கீழ்ச் சிவலிங்கம் தாபித்துப் பூசை செய்த தலமே, திருவாப்பாடி என இன்றும் விளங்கி வருகின்றது.

சிவபூசை செய்யுங்கால், இவர் திருமஞ்சனம் ஆட்டும் செயலின் இயல்புணராத சேய்ஞலூர் மறையவர்கள், இவர் பசும்பாலைக் கறந்து வறிதே மண்ணிற் கவிழ்த்து வீண் ஆக்குகின்றனர் என, எச்சதத்தன் பாற் சென்று குறை கூறினர். எச்சதத்தன் அதுகேட்டுச் சினந்து

வந்து, ஒரு குராமரத்தின் மீது ஏறி ஒளிந்திருந்து, இவர் சிவபூசை செய்தலைக் கண்டான். கோபம் கொண்டு ஓடிவந்து, திருமஞ்சனக் குடப்பாலைக் காலால் இடறிச் சிந்தினன். அது கண்ணுற்ற விசார சருமர், தம்மை மறந்த சிவத்தியான நிலையில், அருகே கிடந்த ஒரு கோலை எடுத்து எறிந்தார். அக்கோலே அருளால் மழுவாக மாறி, அவனுடைய இரு தாள்களையும் வெட்டி, அவனைக் கீழே விழும்படிச் செய்தது. விசாரசருமர் பின்னரும் சிவவழிபாட்டிலேயே மனம் ஒன்றி நின்றார்.

அந்நிலையில் சிவபெருமான் வெளிப்பட்டு, பக்திமுதிர்ந்த பாலகனார் ஆகிய விசாரசருமர்க்குக் காட்சி கொடுத்தார். "நம் பொருட்டால் ஈன்ற தாதை விழ எறிந்தாய். அடுத்த தாதை இனியுனக்கு நாம்" என்று அருளிச் செய்தார். கருணையினால் அவரை அணைத்துத் தடவி உச்சி மோந்து மகிழ்ந்தார். சிவபிரானின் திருமலர்க் கைகளால் தீண்டப் பெற்றமையால், விசாரசருமரின் மாயாமல யாக்கை, சிவமயமாகி ஒளி வடிவம் பெற்றது. அவர் திருவருளில் மூழ்கித் திளைத்தார்.

சிவபிரான் அவரைத் தம் தொண்டர்களுக்கெல்லாம் தலைவராக ஆக்கினார் "எமக்கு நிவேதனம் செய்த பொருள்களும், யாம் உடுத்த ஆடைகளும், சூடிய மாலை முதலிய அணிகலன்களும் ஆகிய அனைத்தும் இனி நினக்கே உரிமையுடையன. யாம் நினக்குச் சண்டீசன் என்னும் பதம் தந்தோம்" என்று கூறி, அதற்கு அடையாளமாகத் தமது சடை முடியினின்று கொன்றை மாலையினை எடுத்து விசாரசருமர்க்குச் சிவபிரான் சண்டேசப் பதம் அளித்து அனுக்கிரகம் புரிந்த நிலையே சண்டேச அனுக்கிரக மூர்த்தம் எனப்படும்.

காவியமும் ஓவியமும் :

இம்மூர்த்தத்தின் இயல்பினை விளக்கும் அழகிய சிற்பங்கள் கங்கை கொண்ட சோழபுரம் கோயில், சிதம்பரம் நடராஜர் கோயில், காஞ்சிபுரம் கயிலாசநாதர் கோயில், முதலிய இடங்களிற் காணப்படுகின்றன. இவற்றுளெல்லாம் கங்கைகொண்ட சோழபுரம் கோயிற் சிற்பம் கண்கவர் கவினும் கவர்ச்சியும் மிக்குடையதாகத் திகழ்கின்றது.

காவியமும் ஓவியமும் தம்முள் மிகவும் தொடர்புடையன. "கவிஞனும் ஓவியனும் தமக்குள் ஒருவருக்கொருவர் உள்ளுணர்ச்சிப் பெருக்கம் ஊட்டிக் கொள்ளுகின்றனர்" ("The poet and the painter influence and inspire one another.") என்று அறிஞர்கள் கூறுவதுண்டு. கவிஞர்களின் கவிதைக் கருத்துக்களுக்கு ஓவியர்கள் சித்திரம் தீட்டுத லும், ஓவியர்கள் தீட்டிய சித்திரங்களை வியந்து கவிஞர்கள் கவிதை இயற்றுதலும் இயல்பேயாகும். மேலை நாட்டு இலக்கியங்களில், மைக்கேல் ஏஞ்சலோ (Michael Angelo, 1475-1564), ரஃபேல் (Raphael 1483-1520) போன்ற புகழ்மிகுந்த ஓவியர்களின் விளைவைக் காணலாம்

அம்முறையில் கங்கைகொண்ட சோழபுரம் கோயிற் சிற்பத்தினைச் சேக்கிழார் சுவாமிகள் பலகாற் கண்டு மகிழ்ந்து வியந்திருத்தல் கூடும். அதன் பயனாகவே,

அண்டர் பிரானும் தொண்டர்தமக் கதிப னாக்கி அனைத்தும் நாம்
உண்ட கலமும் உடுப்பனவும் சூடுவனவும் உனக்காகச்
சண்டீசனுமாம் பதம் தந்தோம் என்றங்கவர் பொற்றட முடிக்குத்
துண்ட மதிசேர் சடைக் கொன்றை மாலை வாங்கிச் சூட்டினார்

என்னும் பெரியபுராணச் செய்யுளைச் சேக்கிழார் அருளிச் செய்தனராதல் கூடும். இப்பாடலுக்கேற்பச் சிற்பம் அமைந்ததா? அன்றிச் சிற்பத்திற் கேற்ப இப்பாடல் அமைந்ததா? என நினைந்து வியக்கும் வகையில் இரண்டும் ஒன்றையொன்று தழுவி அழகுற அமைந்து விளங்குகின்றன.

முடிப்புரை :

தஞ்சைப் பெரிய கோயிலைக் கட்டியமுதலாம் இராசராசசோழனின் (கி.பி. 985-1014) புதல்வன் ஆகிய முதலாம் இராசேந்திரசோழன் (கி.பி. 1012-1014), தன் வடநாட்டுப் போர்களின் வெற்றிக்கு அறிகுறியாகப் புதிதாக அமைத்த தலைநகரமே 'கங்கைகொண்ட சோழபுரம்' ஆகும். இராசேந்திர சோழனுக்குப்பின்,


முதலாம் இராசாதிராசன் (கி.பி. 1044-1052)
இரண்டாம் இராசாதிராசன் (கி.பி. 1052-1063)
முதலாம் வீரராசேந்திரன் (கி.பி. 1063-1069)
அதிராசேந்திரன் (கி.பி. 1069-1070)
முதலாம் குலோத்துங்கன் (கி.பி, 1070-1120)
விக்கிரம சோழன் (கி.பி. 1118-1135)

என்னும் அரசர்கள் வரிசை முறையே ஆட்சி நடத்தினர். அதன் பின்னர், பட்டத்திற்கு வந்து முடிசூடிக்கொண்டு ஆட்சி செலுத்திய அரசனே இரண்டாம் குலோத்துங்கச் சோழன். அவன் காலத்தில்தான் (கி.பி. 1135-1150), சேக்கிழார் வாழ்ந்தார் என்பது வரலாறு.

ஆதலின், சேக்கிழார் சுவாமிகள் கங்கைகொண்ட சோழபுரத்திற்குப் பற்பல முறைகள் சென்று தங்கியிருந்திருப்பார் என்றும்; அங்குள்ள கங்கைகொண்ட சோழேச்சுரர் கோயிலுக்குச் சென்று பலகால் வழிபட்டிருப்பார் என்றும், அப்போதெல்லாம் அக்கோயிலில் அமைக்கப்பெற்றுத் திகழும் அழகின் மிகுந்த சண்டேசானுக்கிரக மூர்த்தச் சிற்பம் அவர்தம் கருத்தையும் கவர, அதனை அவர்கண்டு வியந்து பெரிதும் மகிழ்ந்திருப்பார் என்றும் நாம் எண்ணி இன்புறலாம்.

உ

சிவமயம்



சிவ லிங்கம்

சீலத்திரு ஞானப்பிரகாச தேசிக பரமாசாரிய சுவாமிகள்

(2)

அருவும் உருவும் ஆகிய எல்லாப் பொருளுக்கும் சிவமே காரணம். ஆதலின், அவை அனைத்தும் அவனை அறியவும் அடையவும் உள்ள குறிகளாகும். ஆதலின், அவற்றைச் சிவமயமாக் கண்டு வழிபட்டனர் உணர்ந்தோர்.

'எல்லாவுலகமும் ஆனாய் நீயே
ஏகம்பம் மேவி யிருந்தாய் நீயே'

'எல்லாம் சிவன் என்ன நின்றாய் போற்றி'

எனத் தாண்டகச்சதுரர் வழிபட்டவாறுணர்க.

ஐந்து பெரும் பூதங்களின் பரிணாமமாய் முப்பத்தாறு தத்துவங்களுடன், நிவிர்த்திகலை முதல் சாந்தியாதீதகலை முடிவான ஐந்தும் ஆதாரமாய், அண்டபுருடனொடு கூடிச் சிவனுக்குத் திருமேனியாக இருப்பதால் இவ்வண்டம் சிவாலயம். இச் சிவாலயத்துள் உள்ளது என்ன லிங்கம்?

அவ்விலக்கணங்களையெல்லாம் கொண்டதாயிருத்தலால் இப் பிண்டம் சிவாலயம். இச் சிவாலயத்துள் உள்ளது என்ன லிங்கம்?

"அண்டத்துண் டாவதுபோற் பிண்டத்துண் டாமதுவே
அண்டர் பெருமான் அருள்செய்த—பண்டை
அருளா கமத்திற் கவிரோதம் இல்லாப்
பொருளாகும் மேன்மைப் பொருள்."

என மெய்கண்ட சந்தானத்துச் சிவனார் அருளியதுணர்க. திருமூல தேவநாயனார், "இலிங்கமாவது எண்டிசையெல்லாம்," 'அத்துவா ஆறும் சிவமே,' 'அண்டம் கடந்து அப்புறம் நின்று காத்தனன் என்னும் கருத்தறியாரே,' 'புதுவுணர்வான புவனங்கள் எட்டும் கோயில் கொண்டானே,' என அண்டலிங்கத்தையும், 'இது உணர்ந்து என்னுடல் + உளம் கோயில் கொண்டானே' எனப் பிண்டலிங்கத்தையும் அறிவித்தருளினார்.

உடல் கோயிலாதலைக் 'காயமே கோயில்' என்றும், உளம் கோயிலாதலை 'நினைப்பவர் மனம் கோயிலாக் கொண்டவன்' என்றும் வரும் அப்பர் திருவாக்கும், 'உள்ளம் பெருங்கோயில்' என்ற திருமந்திரமும் கொண்டுணர்க.

'மானுடராக்கை வடிவு சிவலிங்கம்' என்றதன் உண்மைப் பொருள் :- பழைய (சிவஞான போத)வுரையுள் (பக்கம். 102-3) ஜீவந்முக்திக்குரிய சாதகத்யாநம் நிமித்தம் உணர்த்தியதொன்று இது.

ஆணவமலம் என்னும் குளத்தில் வினை என்னும் சேற்றையுற்று' மாயையாகிய விதையின் முளைத்தெழுந்து, ஆன்ம தத்துவம் இருபத்து நான்கும் தாமரைத் தண்டாகவும், வித்தியாதத்துவம் ஏழும் சிவதத்துவத் துள் சுத்த வித்தையும் ஆகிய எட்டும் அத்தாமரையின் பூத்துவிரிந்துள்ள எட்டு இதழாகவும், மகேசுரம் சாதாக்கியம் இரண்டும் அவ்விதழ்க்குள் பொகுட்டைச் சூழ்ந்திருக்கும் கேசரங்களாகவும், விந்துதத்துவம் அ(த் தாமரை)ப் பொகுட்டாகவும், நாத (சிவ) தத்துவம் அப் பொகுட்டி னுள் இருக்கும் விதைக்கண்ணாகவும் மானுடதேகத்தைத் திருவைந் தெழுத்தால் தூய தாக்கிச் சிவனுக்குப் பதுமாசனம் ஆகக் கருதி, அதன் மேல், ஜீவந்முக்திக்குத் தக்க பக்குவ சீலனைத் தானாக்கிக் கொண்டு நிற்கும் முதல்வன் திருவடித் தாமரையாகிய சிவஞானரூபத்தைக் கண்டு நேராக நோக்கி வழிபடுக.'

இக்கருத்தை யுணர்த்தும் பாடல் உலகுடை நாயனார் கழிநெடிலின் முதற்கண் உளது. அது மிகச் சிறந்ததொன்று.

மலமெனுந் தடத்திற் கருமசே தகத்தின்
மாயையாங் கிழங்கிலங் குரித்து
மன்னுமூ வெட்டாந் தத்துவ நாள
மலரிதழ் வித்தையேழ் வித்தை
நலமிகு மீசன் சதாசிவ மிரண்டு
நண்ணுகே சரங்களாஞ் சத்தி
நற்பொகுட் டாகு நாதமே விந்து
நயந்தகண் ணுமென விரவி
இலகுமென் னுடலப் பதுமபீ டிகைநீ
யிருந்தரு ளாசன மெனமல்
எனதுபுக் கிலதா யெண்ணினேன் றெளிய
வியலருட் பார்வைதந் தனையே
அலகிலா வுயிர்கண் மலநடைக் கிலையா
யருணடைக் குண்மையாய் நின்ற
ஆவடு துறைசை யம்பலவாணு
வடியவர்க் கருளுமா நிதியே.

ஆறுவழி (அத்துவாக்)களும் சிவலிங்கத்தில் உள்ள முறை. நிவிர்த்திகலையும் பிரதிட்டாகலையும் கொண்டது பிரமபாகம். வித்தியாகலை ஒன்று விட்டுணு பாகம். சாந்திகலையும் சாந்தியாதீதகலையும் கொண்டது உருத்திரபாகம். தத்துவம், புவனம், எழுத்து, சொல், மந்திரம் என்ற

ஐந்தும் (அவ்வக்கலையுள்) அடங்கும்வகை அறிந்து கொள்க. அவையும் சிவலிங்கமே. ஆறுவழியும் சிவனுக்கு வடிவமே சாந்தியதீதை திருமுடி, சாந்திகலை திருமுகம், வித்யாகலை திருமார்பு, பிரதிட்டாகலை குய்யம், நிவிர்த்திகலை முழந்தாளும் திருவடியும் ஆம். இவ்வாறு கலையைந்தும் உறுப்பாகும். புவனங்கள் உரோமம். எழுத்துக்கள் தோல். மந்திரங்கள் குருதி, சொற்கள் நரம்பு, தத்துவங்கள் என்புகள் தசைகள் இவையெல்லாம் உருவகம். உண்மை வேறு.

'அவயவம் கலைகள் ஆகும் ஆதிய புவன ரோமம்
சுவையுறு துவக்கு வர்ணம் சோரிமந்திரங்களாகும்
தவமுறு பதம்நரம்பு தத்துவம் தாது ஆகும்
சிவம்உயர் சதாசிவர்க்குச் சிறந்த ஆறுறுப்புந்தானே'

என்றும் கூறும்.

ஓங்காரலிங்கம்

ஓங்கார பீடம் அகாரம்உயர் கண்டம்மேற்
பாங்கார் உகாரம் பயில்பீடம்-ஆங்குள்
மகாரம் மிகுவட்டம் மன்னுநிலை விந்து
பகாதசிவம் நாதம்எனப் பார். (சிவாநந்தமாலை. 22)

1. ஓங்காரம்-பீடம்	ஓங்காரத்தின் உறுப்புக்கள்
2. அகாரம்-உயர்கண்டம்	அகாரம் + அயன்-அகங்காரம்
3. உகாரம்-மேற் பீடம்	உகாரம் + மால்-புத்தி
4. மகாரம்-பெருவட்டம்	மகாரம் + உருத்திரன்-மனம்
5. விந்து-நிலை	விந்து + மகேசன்-சித்தம்
6. நாதம்-சிவம்	நாதம் + சதாசிவன்-ஆன்மா (உள்ளம்)

ஓங்கும் அகாரம் உகாரம் மகாரம்அதன்
பாங்கணையும் விந்து பரநாதம்—ஆங்குப்
பிரணவமாய்ப் பீடங்களாய்ப்பிரம ரேகை
மருவுநகராதியுடன் வந்து. (பஞ்சாக்கரமாலை. 7)

ஓங்கார மேநற் றிருவாசி உற்றதனின்
நீங்கா எழுத்தே நிறைசுடராம்—ஆங்காரம்
அற்றார் அறிவர்அணி அம்பலத்தா னுடல்இது
பெற்றார் பிறப்பற்றார் பின். (உண்மை விளக்கம்)

பஞ்சாக்கரலிங்கம்

ஆடும்படிகேள்நல் லம்பலத்தான் ஐயனே
நாடுந் திருவடியி லேநகரம்—கூடும்
மகரம் உதரம் வளர்தோள் சிகரம்
பகருமுகம் வா, முடியப் பார். (ஷை)

சேர்க்குந் துடிசிகரம் சிற்கனவா வீசுகரம்
ஆர்க்கும் யகரம் அபயகரம்—பார்க்கில்இறைக்
கங்கி நகரம் அடிக்கீழ் முயலகனார்
தங்கும் மகரமது தான். (ஷை)

அகாரம் கீழ்ப்பீடம்
உகாரம் நடுக்கண்டம்
மகாரம் மேற்பீடம்

மகாரத்தில் உரைப்பு கலவபத்திரத்துடன் அட்டபந்தனத்தானம். பிரமரேகையாத் திருமேனியைச் சுற்றிய ரேகைக்குக் கீழ் சதாசிவத் தானம். விந்து சுற்றிய ரேகை விந்துத்தானம். நாதம் மேல் முகுளிதமாக எழுந்துள்ளது. அப்பால் பரவிந்துவும் பரநாதமும் ஆகச் சிவலிங்கப் பெருமானுயனுர்க்குக் கீழ்ப்பீடமும் திருமேனியாயிற்று.

எல்லாம் சிவலிங்கமேயாயிருந்தும், சிவனே அவற்றிலெல்லாம் காண்டலினும் எளிது எது? காண்டற்குரிய இடம் இவ்வினுவிற்குரிய விடையாக இப் பாட்டால் காட்டி முடிப்பாம்.

திருமந்திரம்

"உள்ளம் பெருங்கோயில் ஊனுடம்பு ஆலயம்
வள்ளற் பிரானுர்க்கு வாய்கோ புரவாசல்
தெள்ளந் தெளிந்தார்க்குச் சீவன் சிவலிங்கம்
கள்ளப் புலன்ஐந்தும் காளாமணிவிளக்கே."

அதன் பொருள்

"உள்ளம் திருக்கோயில் ஊனுடலே சுற்றுமதில்
வள்ளலுக்கு வாயே மணிச்சிகரம்-தெள்ளித்
தெளிந்தவர்க்குச் சீவன் திருமேனி தீபம்
அளந்தறியும் ஐம்புலனே ஆம்."

ஞான பூஜாவிதி (உமாபதி சிவம்)

ஓங்குடலம் திருக்கோயில் உள்ளிடம் உள் இடமாம்
உட்டொழிலும் புறத்தொழிலும் உரியவரேபுரிவார்
தீங்கில் உயிர் சிவலிங்கம் சிவன் சீவன்யாதும்
செயவேண்டா பசுஞானம் சிவஞானம் சிறந்த
பாங்கதுநம் அன்பு அளவு இல்உபகரணப் பூசைப்
பரிசது நற்றரிசனம் மெய்ப்பணி முழுதும் அடங்கித்
தூங்கிடல் நம் இன்புருவச் சுடராய் நிற்குந்
தொன்மையது அந்தரியாகத் துறையதாமே.

திருக்கோயில் வழிபாடும் சிவபூசையும் செய்துவரின், உயிர்களுக்கு இன்பமே வளரும். என்றும் இன்பம் பெருகும் இயல்பினுல் ஒன்று காதலித்து உள்ளமும் ஓங்குக. அடியார் உலகெலாம் நிலவுக. அவர் புகழ் எங்கும் நிற்க.

திருமாலடியார்

இராமானுசர்

வித்துவான் திரு. கா. அ. மணவாளன், பி.ஏ., பி.ஓ.எல்.

(4)

திருவரங்கத்திலிருந்து பெரியநம்பிகள் இராமானுசரை அழைத்து வர காஞ்சிபுரத்துக்கு வந்த சில நாட்களிலேயே ஆளவந்தாரும் தம் சீடர்களுடன் காஞ்சிபுரத்துக்கு வந்து சேர்ந்தார். திருக்கச்சி நம்பியின் திருமாளிகைக்குச் சென்று தங்கினார். ஏற்கெனவே அங்கு தங்கியிருந்த பெரியநம்பியும், திருக்கச்சி நம்பியும் ஆளவந்தாருடைய வருகையால் பெரிதும் மகிழ்ந்தனர். ஆளவந்தாரும், தாம் இராமானுசரை நேரில் காண வேண்டும் என்ற வேட்கையை வெளிப்படுத்தினார். பிறகு ஆளவந்தார் திருக்கச்சி நம்பிகளுடன் மற்ற சீடர்களுடனும் வரதராசப் பெருமாள் கோயிலுக்குச் சென்று, அப்பெருமானை வணங்கி இராமானுசரை 'வைணவத்திரு' தழைத்தோங்க வழங்கியருள வேண்டு மென்று வேண்டிக் கொண்டார்.

பின்பு கோயிலைச் சுற்றி வலமாக வந்து, திருக்கச்சி நம்பிகளின் மடத்துக்குச் செல்லும் வழியில், எதிரில் யாதவப்பிரகாசர் இராமானுசரின் தோளின் மேல் கையை வைத்துக் கொண்டுச் சீடர்கள் புடைசூழ வந்து கொண்டிருந்தார். அப்பொழுது அருகிலிருந்த திருக்கச்சிநம்பிகள் இராமானுசரைச் சுட்டிக்காட்டி 'பொன்போன்று ஒளிரும் திருமேனி யோடு மிகவும் உயரமாய்க் காட்சியளிப்பவரே இராமானுசர்' என்று கூறினார். ஆளவந்தாரும் இராமானுசருடைய வடிவழகில் ஈடுபட்டுத் தம்முடைய திருக்கண்களாலே நன்கு நோக்கி அருள்பாலித்தார். எதிர்காலத்தில் நம் வைணவத் தரிசனத்தைச் கட்டிக் காக்கவல்லவன் இவன் என்று கருதி 'ஆமுதல்வன்' என்று கூறி ஆசி வழங்கினார். பின்பு அத்துவித குருவாகிய யாதவப்பிரகாசரிடமிருப்பதால் அவரோடு உரையாட விரும்பாமல் தம் சீடராகிய பெரியநம்பிகளிடம், எப்படி யாவது இராமானுசரைத் திருவரங்கத்துக்கு அழைத்து வரும்படி பணித்துவிட்டு அழகிய மணவாளனாகிய அரங்கநாதனைப் பிரிந்திருக்க முடியால் உடனே திருவரங்கத்துக்குச் சீடர்களுடன் புறப்பட்டுவிட்டார்.

திருவரங்கத்துக்கு வந்து சேர்ந்த சில நாட்களிலேயே ஆளவந்தாருடைய திருமேனி தளர்ந்தது. உடல் நோயுற்றார். எப்பொழுதும் நம்பெருமாளையே தியானித்துவரும் ஆளவந்தார் மெதுவாகக் கோயிலுக்குச் சென்று, பெருமாளைத் திருவடி முதல் திருமுடி வரை கண்டு தொழுது, அருச்சகர் அளித்த துளசி முதலிய பிரசாதங்களைப் பெற்றுக்கொண்டுத் தம்முடைய மடத்துக்கு எழுந்தருளினார். மடத்துக்கு வந்த ஆளவந்தார் கோயில் நிருவாகிகளைக் கூப்பிட்டுப் பெரிய பெருமாளுடைய பூசைகளையும், விழாக்களையும் குறைவில்லாமல் நடத்தி வரவேண்டுமென்று கேட்டுக் கொண்டார். பின்பு சீடர்களில் சிலர் வடமொழி மறையையும், வேறு சிலர் தென்மறையாகிய திவ்வியப் பிரபந்தங்களையும் ஓத, ஆளவந்தார் தம் ஆசானாகிய மணக்கால் நம்பி யின் திருவடிகளைத் தியானம் செய்து கொண்டே திருநாட்டுக்கு எழுந்

தருளினர். சீடர்களும், மற்றவர்களும் தாய் இல்லாப் பிள்ளைகள் போல் தவித்தார்கள். பெரியவர்கள் தேற்ற ஒருவாறு தேறினர். ஆளவந்தாருக்கு மறைமுறைப்படி திருப்பள்ளி அமைத்து, அவரது திருமேனியைப் பள்ளிப்படுத்த, மறைவல்லார்கள் வந்து சேர்ந்தார்கள். பெரிய பெருமாளிடமிருந்து திருப்பரிவட்டமும், திருத்துழாய்மாலையும் கொண்டுவந்து சாத்தப்பட்டது. அன்பர்களின் பெருந்திரள் சூழவும், பல்இயங்கள் ஒலிக்கவும் ஆளவந்தாருடைய திருமேனியை கொள்ளிடத்தின் திருக்கரம்பன்துறைக்கு எழுந்தருளப்பண்ணிக் கொண்டு சென்றார்கள்.

இந்நிலையில் காஞ்சிபுரத்திலிருந்து இறையருளால் பெரியநம்பியும் இராமாநுசரும் அன்று திருவரங்கத்துக்கு வந்து சேர்ந்தனர். பெரிய நம்பிகள் ஊரே பாழாகித் துன்பத்தில் ஆழ்ந்திருக்கும் நிலையைக் கண்டார். ஆசானாகிய ஆளவந்தார் திருநாட்டுக்கு எழுந்தருளிவிட்டார் என்ற செய்தியைக் கேட்டதும் வேரற்ற மரம் போலே கீழே விழுந்து புலம்பினர். இராமாநுசரும் கண்ணீர் பெருக்கிச் செய்வதறியாது திகைத்தார். அருகிருந்தார் தேற்றத்தேறி, மிகவும் விரைவாகத் திருக்கரம்பன் துறைக்குச் சென்றார்கள். அங்கு ஆளவந்தாரைத் திருப்பள்ளி படுத்தும் நேரமாக இருந்தமையால் நல்ல வேளையாக ஆளவந்தாருடைய திருமேனியைத் தரிசிக்கும் வாய்ப்பினை இராமாநுசர் பெற்றார். இராமாநுசர் விம்மி விம்மி அழுதார். உறங்குவதுபோல் காட்சியளிக்கும் ஆளவந்தாருடைய திருமேனியைக் கண்களைத் துடைத்துக் கொண்டு உற்று நோக்கினர். ஒவ்வொரு அவயவமாகப் பார்த்தார். அப்பொழுது ஆளவந்தாருடைய வலது கையில் மூன்று விரல்கள் மடக்கியிருப்பதைக் கண்டார். அருகிலிருந்த பெரியநம்பியை நோக்கி 'சுவாமி, எப்பொழுதும், ஆளவந்தாருக்கு இப்படி மூன்று விரல்கள் மடங்கித் தானிருக்குமா' என்று கேட்டார். பெரியநம்பிகளும் கூர்ந்து கவனித்து ஆசானுக்கு எப்பொழுதும் இப்படியிருந்ததில்லை. இப்பொழுதுதான் இப்படிக் காண்கிறேன் என்று கூறினர். பக்கத்திலிருந்தவர்கள் இதுவரை இதைக்கவனிக்கவே இல்லை. அப்பொழுது பெரியநம்பிகள் 'ஆளவந்தாருக்கு ஏதோ மூன்று குறைகள் உள்ளன போலும்' என்று சொல்லி எண்ணிச் சிந்திக்கலானர். உடனே அவருக்கு ஆளவந்தார் மிகவும் விரும்பும் மூன்று பெரியவர்களின் நினைவு வந்தது. அதாவது பாரதமியற்றிய வியாசரும், விட்டுணு புராணமியற்றிய பராசரரும், திருவாய்மொழி இயற்றிய நம்மாழ்வாரும் ஆளவந்தாராலே பெரிதும் போற்றப்படுபவர்கள். நம்மாழ்வாருடைய கொள்கைகளுக்குப் பொருத்தமாகப் பிரம்ம சூத்திரங்களுக்கு ஒரு பாடியமெழுதவேண்டுமென்று வெகுநாட்களாக ஆளவந்தார் சொல்லி வந்தது அப்பொழுது நினைவுக்கு வந்தது. அப்படி விசிட்டாத்துவிதக் கொள்கைகளை விளக்கி ஒரு பேருரை நூலை எழுதாமல் போகிறோமே என்ற குறையால்தான் அவருடைய மூன்று விரல்களும் மடங்கிக் கிடக்கின்றன என்று ஊகித்து இராமாநுசரிடம் தெரிவித்தார்.

உடனே இராமாநுசர் ஆளவந்தாரின் அக்குறை நீங்கும் வண்ணம் அடியேன் பிரம்மசூத்திரங்களுக்கு விசிட்டாத்துவித கொள்கைகளை விளக்கி ஒரு பேருரைநூல் எழுதித் தருகிறேன் என்று வாக்களித்தார். மேலும் அங்கிருந்தவர்களைப் பார்த்து 'ஆளவந்தாருடைய அருள் அடியேனுக்குப் பூரணமாயிருந்து, இந்த உடம்பும் திடமாக இருக்குமானல் இவருடைய முக்குறைகளையும் நீக்கி அவருடைய விருப்பங்களை நிறைவேற்றுவேன்' என்று கூறினர். கூடியிருந்த அனைவரும் இராமாநுசருடைய பரந்த உள்ளத்தையும், ஆசாரிய பக்தியையும் போற்றினர்கள். இராமாநுசரும் ஆளவந்தாரைப் பிரிந்த காரணத்

தால், திருவரங்கநாதனையும் தொழுது வணங்க மனமில்லாதவராய்ப் பெரியநம்பிகளிடம் விடைபெற்றுக் கொண்டு காஞ்சிபுரத்துக்கே திரும்பி வந்து விட்டார். வழியெல்லாம் ஆளவந்தாரின் திருவுருவமே அவர் மனக்கண்முன் தோன்றியது. எப்படியும் ஆளவந்தாருடைய திருவுள்ள முகக்கும் படியாக ஒரு பேருரைநூலை விசிட்டாத்துவிதக் கொள்கைகளை விளக்கி இயற்ற வேண்டுமென்று முடிவு செய்தார். காஞ்சிபுரத்துக்கு வந்து சேர்ந்த இராமாநுசர் திருக்கச்சிநம்பியின் திருமடத்துக்குச் சென்று ஆளவந்தார் திருநாடலங்கரித்த வரலாற்றையெடுத்துச் சொன்னார். நம்பிகளும் தமக்கு எல்லாவிதத்தாலும் ஆசாரியராக விளங்கிய ஆளவந்தாரின் பிரிவுக்கு வருந்தித் தேவப்பெருமாளாகிய வரதராசரிடம், இனி இராமாநுசரைக் கொண்டு இந்த வைணவ தரிசனத்தை வளர்த்தியருளவேண்டுமென்று வேண்டிக் கொண்டார்.

இராமாநுசரும் திருக்கச்சிநம்பியிடம் பெருமதிப்பும், பக்தியும் கொண்டு அவர் கட்டளைப்படியே வரதராசருக்குத் திருமஞ்சனத்துக்கும், திருப்போனகத்துக்கும் சாலைக் கிணற்றிலிருந்து பழையபடியே திருக் குடங்களில் நீரைக் கொண்டுவந்து அளித்துத் தொண்டாற்றி வந்தார். இப்படி நம்பியும் இராமாநுசரும் ஒருங்கிணைந்து தொண்டாற்றி வந்த காரணத்தால் அவர்களுக்குள்ளே நல்ல நெருக்கமான உறவு ஏற்பட்டது. தேவப்பெருமாளுக்குத் திருவாலவட்டம் வீசித் தனிமையிலே தொண் டாற்றும் பெருமை நம்பிகளுக்கு உண்டு. திருக்கச்சிநம்பிகளின் பக்தியிலே கட்டுண்ட வரதராசப்பெருமாள் அவரோடு சிலநேரங்களில் பேசியுமிருக்கிறார். இவ்விதம் திருமாலை தொடுத்துச் சாத்தித் திருவால வாட்டம் வீசி இனிய தொண்டாற்றிவரும் நம்பிகளிடம் இராமாநுசருக்கு அளவு கடந்த பக்தியுண்டாகியது.

ஒருநாள் இராமாநுசர் திருக்கச்சிநம்பிகளைத் தண்டனிட்டு அடியேன் உய்யும் வண்ணம் தாங்கள் அருமறைப் பொருள்களையும், ஆழியான் பெருமைகளையும் உபதேசிக்க வேண்டும் என்று வேண்டினார். இராமா நுசர் உயர்ந்த அந்தணர் குலத்தில் தோன்றியும், தான் வைசிய குலத்தில் தோன்றியதைக் குறைவாகக் கருதாமல் தம்மைச் சரணடைந்து உயர்பொருளைக் கேட்கின்றாரே என்று வியந்து வரதராசப் பெருமாளிடம் விண்ணப்பித்து அவரனுமதி பெற்று இராமாநுசருக்கு அரும்பொருள்களை உபதேசித்தருளினார். திருக்கச்சிநம்பிகள் அருளிய உபதேசமொழிகளைச் செவிமடுத்த இராமாநுசரும் அவரையே தம் குருவாக ஏற்றுக் கொண்டார். அன்பு மேலீட்டால் திருக்கச்சிநம்பியைத் தம் இல்லத்திற்கு அழைத்து வந்து விருந்து படைக்க விரும்பினார். இச்செய்தியைத் தம் வீட்டிற்கு வந்து மனைவி யாகிய தஞ்சமாம்பாளிடம் கூறி பரம பாகவதராகிய நம்பிகளுக்கு அவர் மனம் மகிழும் வகையில் நல்விருந்து படைக்க வேண்டுமென்று சொல்லி விட்டுத் திருக்கச்சிநம்பிகளின் மடத்துக்குச் சென்றார். நம்பிகளின் திருவடிகளில் வீழ்ந்து வணங்கி ‘சுவாமி நாளை அடியேன் குடிசைக்குத் தாங்கள் பொன்னடி சாத்தித் திருவமுது செய்தருள வேண்டுமென்று வேண்டிக்கொண்டார். நம்பியும் இராமாநுசரின் வேட்கையைத் தட்ட முடியாமல் அவ்விதமே வருவதாக ஒப்புக் கொண்டார்.

மறுநாள் பொழுது விடிந்தவுடன் நம்பிகள் குளத்திற்குச் சென்று நீராடி விட்டுத் திருமண் காப்பு சாற்றிக் கொண்டு வரதராசப் பெருமாளைப் பற்றிய தோத்திரங்களைச் சொல்லிக் கொண்டிருந்தார். அப்பொழுது கோயிலின் மணியோசை கேட்கவே தாம் தினந்தோறும் செய்துவரும் திருவாலவட்டத் திருத்தொண்டினைச் செய்ய நாழிகையாகி விட்டதேயென்று எண்ணி இராமாநுசருடைய திருமாளிகைக்கு வந்து

சேர்ந்தார். அப்பொழுதுதான் இராமானுசர் நம்பிகள் வந்த வழிக்கு எதிர்வழியாகச் சென்று திருவமுதுக்கு நப்பியை அழைத்துவரப் போயிருந்தார். திருக்கச்சிநம்பிகள் இராமானுசர் இல்லத்தில் இல்லாததை யுணர்ந்தார். என்றாலும் பூசைக்காலங்களில் பெருமாளுக்குச் செய்ய வேண்டிய திருத்தொண்டினைச் செய்வதற்குக் கால தாமதமாகின்றதே என்று கருதித் தஞ்சமாம்பாளிடம் தமக்கு விரைவாக அமுது சாதிக்க வேண்டினார். இராமானுசருடைய மனைவியாகிய தஞ்சமாம்பாளும் மிகவும் பயபக்தியோடு நம்பிகளுக்குத் தாம்படைத் திருந்த உணவு வகைகளைப் பரிமாறினாள். அன்போடு உபசரித்தாள். நம்பிகளும் வேகமாகச் சாப்பிட்டுவிட்டு இராமானுசர் வந்தால் யான் அமுது செய்து விட்டுக் கோயிற்பணிக்குச் சென்றதைச் சொல்லி விடுங்கள் என்று கூறிப்புறப்பட்டார். நம்பிகள் சென்ற சிறிது நேரத்தில் இராமானுசரும் திரும்பி வந்து கொண்டிருந்தார். அப்பொழுது தஞ்சமாம்பாள் நம்பிகள் சாப்பிட்ட இலையைக் கோலால் தூக்கியெறிந்து விட்டு அந்த இடத்தையும் கோமயத்தால் சுத்தம் செய்துத் தாமும் நீராடி நின்றிருந்தாள். அந்நேரத்தில் இராமானுசர் தம் இல்லத்திற்கு வந்து அக்கோலத்தைக் கண்டுவிட்டார். மனைவியை நோக்கி இப்பொழுது என்ன நேர்ந்தது? நம்பிகள் வந்தாரா? நீ ஏன் நீராடி நிற்கின்றாய் ? என்றெல்லாம் படபடக்கக் கேட்டார். உடனே அம்மையாரும் நம்பிகள் வந்து சாப்பிட்டுச் சென்றதையும், அந்த இலையைக் கோலால் தள்ளி, இடத்தைச் சுத்தம் செய்த பின்பு தான் நீராடி நிற்பதையும் தெரிவித்தாள். திருக்கச்சிநம்பிகள் வைசிய குலத்தில் பிறந்தவர் என்ற சாதி வித்தியாசத்தால் இப்படி அபசாரத்தைச்செய்து விட்டாளே என்று மிகவும் மனமுடைந்து, தான் அமுது செய்யாமல், தன்மனைவியை மிகவும் கடிந்து கொண்டார்.

திருக்கச்சிநம்பிகள் அமுது செய்த பின்பு அந்த சேடத்தை உண்டு உய்யலாம் என்று நம்பிய இராமானுசருக்குத் தன் மனைவியின் செயல் மனத்தில் ஆறாப் புண்ணாயிற்று. இனி எண்ணி யாது பயன் என்று தன்னையே தான் தேற்றிக் கொண்டார். சாதியால் உயர்வு தாழ்வு கருதும் இவளுடன் வாழ்ந்து நாம் எப்பேற்றையும் அடைய முடியாது என்று திண்ணமாக முடிவு செய்தார். இராமானுசர் வேகமாகத் திருக்கச்சி நம்பிகளைக் கண்டு அவருடைய திருவடிகளில் வீழ்ந்து வணங்கினார். வரதராசப்பெருமாள் உம்மோடு பேசுவதாகப் பலரும் கூறுகிறார்களே ! தாங்கள் என் பொருட்டு சில ஐயங்களை எம்பெருமானிடம் விண்ணப் பித்து அவைகளுக்கு ஏற்ற விடைகளை அவன் வாயிலாகப் பெற்றுத்தர வேண்டும் என்று வேண்டினார். நம்பிகளும் இராமானுசரின் வேண்டு கோளின்படியே தேவப்பெருமாளிடம் விண்ணப்பித்து பெருமாள் கூறிய பதிலுரைகளை ஆறு வார்த்தைகளாக இராமானுசருக்குக் கூறினார். அதாவது அந்த வார்த்தைகளில் முதலாவது திருமாலே பரம்பொருள் என்பது. இரண்டாவது சீவாத்துமாவுக்கும், பரமாத்துமாவுக்கும் உள்ள வேற்றுமையை எண்ணுவது. மூன்றாவது சரணாகதியும் பிரபத்தியுமே முக்தி நெறி. நாலாவது அந்திம காலத்தில் இறைவனிடம் மனத்தைச் செலுத்த வேண்டும் என்ற அவசியம் கூட இல்லையென்பது. ஐந்தாவது சரீர முடிவில் அடியார்களுக்கு முக்தி நிச்சயம் என்பது. ஆறாவது பெரிய நம்பியைக் குருவாக கொள்ளவேண்டும் என்பது. இவ்வாறு வார்த்தைகளையும் வரதராசப்பெருமாள் தம்மிடம் சொன்னதாகத் திருக் கச்சிநம்பிகள் இராமானுசரிடம் கூறினார். இராமானுசரும் தாம் மனத் தில் நினைத்திருந்தவைகளையே பெருமாளும் கூறிவிட்டார் என்று பெருமகிழ்வெய்தினார். இனி பெருமாள் திருவுள்ளப்படியும், கட்டளைப் படியும் பெரியநம்பிகளைச் சரணடைந்து ஞானோபதேசம் பெறவேண்டு மென்ற வேட்கையால் திருவரங்கத்திற்குப் புறப்பட்டார்.

(தொடரும்)

சந்தான குரவர் வரலாறு

டாக்டர் சொ. சிங்காரவேலன், எம்.ஏ., பிஎச்.டி.,

உமாபதி சிவாசாரியார் வரலாறு (தொடர்ச்சி)

"தாட்டுணேயே புணேயாகப் பற்றிநின்று
தனிமாயைக் கடல்நீந்தும் தக்கோர் பாலோ
கோட்டமிலா மனத்தோடும் குளத்தில் உன்னேக்
குறித்துமதி அமிழ்துண்ணும் குணத்தர் பாலோ
ஈட்டமரு மலராதி கொண்டன் பாக
எழிலுறுபூ சனேபுரியும் இயல்போர் பாலோ
நாட்டமொரு மூன்றுடையாய் எங்கணுற்ருய்
நடமிடுவாய் என்றழுது நைவா ராஞர்."

இங்ஙனம் உருகிய அன்பர் யாவரும் கேட்ப, இறைவன் அருள்வாக்கு ஒன்று எழுந்தது; "இன்று பூசனே முறை உடைய உமாபதி நம் அன்பன்; அவன்பாற் சென்று அவனுடைய பூசனேயை ஏற்று நிற்கின்ருேம்." இந்த அருள்வாக்கு அந்தணர் சிந்தையை மூடிநின்ற அறியாமையை நீக்கியது: உமாபதியார் திருமடத்திற்கு விரைந்து, பணிந்து மீண்டும் வந்து பூசனே ஆற்ற வேண்டும் என்று வேண்டிக் கொண்டனர். உமாபதியாரும் தில்லேநாயகன் திருவருட் குறிப்பையேற்றுப் பொன்னம்பலத்திற்குப் போந்து முறைப்படி வழிபாடு செய்து மகிழ்ந்தார். ஞான நெறி நிற்கும் நல்லோர்க்குக் குலம் முதலியன ஒரு மாசும் கற்பிக்க இயலாது என்ற பேருண்மையை உலகம் உணர்ந்து உய்தி பெறுதற்காக இறைவன் நிகழ்த்திய திருவிளேயாடல் இது. அன்றியும், பூசலார் நாயஞர் போன்று 'மானத வழிபாடு' என்னும் மன வழிபாட்டினே உமாபதியார் மேற்கொண்டனர் என்பது, நெஞ்சம் கோயிலாகும் நேயம் மிகுந்தவர் என்ற உண்மையை விளக்குவதாக அமைகின்றது.

பெற்ருன் சாம்பாஞர் திருத்தொண்டு :

தில்லேத் திருக்கோயில் அன்ருட வழிபாட்டிற்குத் தத்தம் உடலாலும் உள்ளத்தாலும் திருத்தொண்டு செய்து வருவோர் பலர் உண்டு. புலர்வதன் முன் திருவலகுத் தொண்டு செய்வோர் பலர்; திருநந்தன வனம் எனப்படும் பூந்தோட்டத்துட்புக்குத் 'திருப்பள்ளித்தாமம்' எனப்படும் பூமாலேத் தொண்டு செய்வோர் பலர். இம்முறையில், திருவமுது ஆக்கப்பெறும் மடைப்பள்ளிக்கு நாள்தோறும் விறகு கொண்டுவரும் திருத்தொண்டை அந்நாட்களில் செய்து வந்தார் ஓர் அன்பர். தாம் பிறந்த குடியால் தாழ்ந்தவரேனும், ஒழுக்கத்தால் அவ்வன்பர் இவ்வாறு அருந்தொண்டு புரிந்து சிறந்து விளங்கி வந்தார். 'பெற்ருன் சாம்பாஞர்' என்பது அவரது திருப்பெயர். திருநாளேப்போவார் பிறந்தகுடி அவரது குடி. அன்பில், திருநாளேப்போவார் அனேயவராகவே அவர் இருந்தார். நடராசப் பிரானுக்குத் திருவமுது ஆக்கும் அருஞ்செயற்கு விறகு கொணர்வதால், அவருடைய உள்ளம் தமக்கு வீடுபேறு ஆகிய முத்தி உறுதியாக உண்டு என்று நம்பியது; தம் திருத்தொண்டினே முட்டுப் பாடின்றிச் செய்து வந்தார். கூத்தப் பெருமான் அவ்வடியவர் கருத்தறிந்து முடிக்கும் கருணேயால் அவருடைய கனவில் ஒருநாள் இரவில் தோன்றிஞர்.

சிவபெருமான் அருளிய சீட்டுக்கவி :

ஓர் ஓலையில் அழகிய வெண்பா ஒன்றை எழுதி அவர் கையில் தந்தருளிய இறைவன், அதனை உமாபதி சிவாசாரியரிடம் தந்து பயன் பெறும்படிக் கூறி மறைந்தார். விழித்தெழுந்த பெற்றான் சாம்பானார் கைகளில் ஓர் ஓலை இருந்தது; அதில் அழகிய வெண்பா ஒன்று வரையப் பட்டிருந்தது.

"அடியார்க் கெளியன்சிற் றம்பலவன் கொற்றங்
குடியார்க் கெழுதியகைச் சீட்டுப்—படி—யின்மிசைப்
பெற்றான்சாம் பானுக்குப் பேதமறத் தீக்கைசெய்து
முத்தி கொடுக்க முறை."

கொற்றவன் குடியில் சாம்பானார் :

பெற்றான் சாம்பானார் பெற்ற மகிழ்ச்சிக்கு அளவே இல்லை. எளிய தமக்கும் தில்லைப் பெருமான் திருவருள் புரிந்து திருக்காட்சி வழங்கியமையை எண்ணி எண்ணி உருகினார். அந்த ஓலையுடன் கொற்றவன் குடித் திருமடத்திற்குச் சென்றார். அவரது வருகையை உமாபதியார்க்கு உரைப்பார் யாரும் இல்லை. அவரும் அதனால் மனம் அயர்ந்து விடாமல் திருக்கோயிலுக்குச் செய்து வந்த விறகுத் திருப்பணியை உமாபதியார் திருமடத்திற்குச் செய்து வரலானார். அப்போதும் அத்தொண்டரது மெய்த்தொண்டின் மேன்மையை யாரும் அறிய வாய்ப்பில்லாது போயிற்று. ஒருநாள் கடுமழை காரணமாகப் பெற்றான் சாம்பானார் திருத்தொண்டிற் பலநாழிகை தாமதப் பட்டது. அன்றைய திருவமுது காலந் தாழ்த்தமைக்குரிய காரணத்தைக் கேட்ட உமாபதியார்க்குக் கடுமழையால் விறகுப் பணியில் நேரம் தாழ்த்தவாற்றை அடியார்கள் உரைத்தனர். இவ்வாறு அன்புள்ளம் கொண்ட ஓர் இனியவரின் தொண்டு பற்றி அறிந்த சிவாசாரியார், மறுமுறை வருங்கால் தமக்குக் கூறுக என்று பணித்தனர்.

சாம்பானார் முத்தி சார்தல் :

மறுநாள் முன்னினும் ஒருமடங்கு பெரிதாக விறகு கொணர்ந்தார் பெற்றான் சாம்பானார். உமாபதியார் பணித்தபடி அவரது வருகையை ஆசிரியர்க்கு அறிவித்தனர். ஞான ஆசிரியர் பெற்றான் சாம்பானாரைச் சந்தித்தார்; அவரது திருத்தொண்டின் வரலாறு பற்றி அன்புடன் உசாவினர். சாம்பானார் உரிய காலம் வந்ததென உவந்து தொழுது, தம் தொண்டின் வரலாறு பற்றி உரைத்து, இறைவன் அளித்த சீட்டு ஓலையினை உமாபதியாரிடம் தந்து பணிந்தனர். உமாபதியார், கூத்தப்பிரான் தாமே முத்தி வழங்கியருளாமல் தமக்குச் சீட்டுக் கவி எழுதிய பெருங்கருணைக்கு உருகினார். 'சத்தியோ நிர்வாணதை' என்னும் தீட்சையைப் பெற்றான் சாம்பானார்க்குச் செய்தார்; அப்போதே முத்தி எய்தினர் சாம்பானார்.

முள்ளிச் செடிக்கும் முத்தி :

பெற்றான் சாம்பானருடைய துணைவியார் முதலிய சுற்றத்தோர் அறியாமையினால், ஒருநாள் விறகு கொடாமைக்காகச் சினந்து சாம்பானாரைக் கொளுத்தி விட்டனர் என்று முடிவு செய்தனர்; அக்காலை அரசனிடம் சென்று முறையிட்டனர். அரசன் உமாபதியார்

பெருமையை அறிவானே ஆயினும், உலகத்தார் ஐயுருதபடி வேருெருவர்க்கு அனைவரும் அறிய முத்திகொடுத்தருள வேண்டும் என்று உமாபதியாரை வேண்டினுன். உமாபதியாரும் உள்ளம் கனிந்து இசைந்தனர். தம் மாணுக்கர் யாருக்கும் அவ்வாறு முத்தியளித்தற்கேற்ற பக்குவநிலை இல்லாதிருப்பதை அறிந்தார். தாம் செய்யும் சிவபூசையின் போது, திருமஞ்சன நீரால் நாள்தோறும் நனைந்து கோமுகி அருகில் முளைத்திருந்த முள்ளிச் செடி ஒன்றினை நோக்கினுர். அந்த அஃறிணை உயிர் தம்முடைய கருணைக்கேற்ற தகுதி உடையதாக நலம் கனிந்திருத்தலை நாடிற்று இந்நல்லோர் உள்ளம். 'சத்தியோ நிர்வாணதை' என்ற தீட்சையினைச் செய்தருளினுர்; உடன் அச்செடி ஒளிமயமாக மாறி விண்ணின் வழியே உயர்ந்து சென்ற வியத்தகு காட்சியை அரசனும் மற்றையோரும் கண்டனர். எல்லோரும் காண ஆறறிவற்ற அஃறிணை உயிர்க்கே உமாபதியார் தீட்சை புரிந்து வீட்டுலகு எய்துவித்த திறத்தை உலகு உணர்ந்து களித்தது. சித்தாந்த சைவச் செந்நெறி மாண்பும், உமாபதியார்க்குள்ள அருணலமும் எங்கும் பரவின.

கொடி ஏற்றிய திறம் :

தில்லைத் திருக்கோயிலில், பெருவிழாக் காலம் அப்போது வந்தது. கொடி உயர்த்தி விழாவைத் தொடங்குவது ஆகம வழக்கு. உமாபதி சிவாசாரியார் கொடி ஏற்றலாகாது என்று ஆராயாத அந்தணர் தடுத்து விட்டனர். பின்னர்த் தாமே அப்பணி தலைப்பட்டபோது கொடி மேலே ஏருது நின்று விட்டது. இறைவனுடைய அருள்வாக்கு, "உமாபதி வந்தாலே கொடி ஏறும்" என்று அப்போது தோன்றிற்று. அந்தணர்கள் இரண்டாம் முறையும் உமாபதியாரிடத்தே பிழையுறவுணர்ந்த நாணம்மிக, அவர்பாற் சென்று வேண்டிக் கொண்டனர். 'இதுவும் இறைவன் இன்னருளே" என்று கருதித் திருக்கோயில் புகுந்த உமாபதியார் 'கொடிக்கவி' என்னும் சிறுநூலைப் பாடியருளினர்; யாரும் ஏற்ற வேண்டாமலே, தானுகக் கொடி ஏறி நின்ற வியத்தகு நிகழ்ச்சியை உமாபதியார் திருவாய் மலர்ந்த கொடிக்கவிப் பாட்டுக்கள் விளைத்து விட்டன. உயர்ந்த சான்ருேர் திருவுள்ளத்தெழுந்த தீந்தமிழ்க் கவிதை எல்லாம் செய்ய வல்லது என்ற உண்மையை, இச்சந்தான குரவருடைய கொடிக்கவி நிகழ்ச்சியின் வாயிலாக உலகம் உணர்ந்து தெளிந்தது. மறைக்காட்டில் வேதங்களால் அடைபட்டுக் கிடந்த திருக்கோயிற் கதவுகள் சமயகுரவர் இருவருடைய தெய்வத் தமிழ்க் கவிதைகளால் திறக்கவும் மூடவும் பெற்று வழிவிட்ட வரலாறு இவ்விடத்தே நினைக்கத் தகுந்ததாகும்.

பெட்டகத்தோடு வந்த பெருமான் :

'திருக்கோயில்' என்ற திருப்பெயருக்குரியதாய் சைவ உலகின் உயிர்த்தலமாக விளங்குவது தில்லை; இங்குக் கற்பனை கடந்த சோதி வடிவினனுகிய கூத்தப் பெருமான், கருணையே திருவுருவமாகக் கொண்டு திருச்சிற்றம்பலத்துள் பொற்புற நடஞ்செய்து விளங்குகின்ருன். இத்தலம் மூர்த்தி, தலம், தீர்த்தம் என்ற மூன்ருனும் சிறந்து விளங்குவது. 'மூர்த்தி அம்பலக் கூத்தனது உருவே; தீர்த்தம் என்பது இங்குள்ள சிவகங்கையே; ஏத்துதற்கரிய தலம் புலியூர் எனப்பெறும் சிதம்பரமே' என்று குமரகுருபர அடிகள் அகங்குளிர்ந்து பாடுவர். இத்திருத்தலத்திற்கு உரிய பெருமைகளையெல்லாம் திரட்டிக் 'கோயிற் புராணம்' என்று இயற்றியருளினுர் உமாபதி சிவாசாரியர். இந்நூல்

பொன்னம்பலக் கூத்தனின் சேவடிக் கீழேயே அரங்கேற்றப் பெறுதல் வேண்டும் என்று கருதினர். இப்புராணச் சுவடியை ஏந்தி உமாபதியார், பொன்னம்பலம் புகுந்தபோது, அந்தணர் அழுக்காறு பின்னும் பேருருக் கொண்டது; தடுத்து விட்டனர். பின்னே பெற்ற அநுபவங்கள் அவர்களுடைய சிற்றறிவின் எல்லைக்குப் போதுமானவையாக இல்லாமையே இதற்குக் காரணம் என்று கூறலாம். உள்ளம் வருந்தித் திரும்பிய உமாபதியார் தம் பெட்டகத்துள் அச்சுவடியை வைத்துப் பூசித்து மனம் தேறினர். வழக்கம்போல் பொன்னம்பலத்துப் பூசை செய்யப் புக்கபோது பூசைப் பெட்டகத்துடன் புனிதனைக் காணாது திகைத்த அந்தணர்க்கு அருள்வாக்கின்வழி அண்ணல் உணர்த்தினன். நடுநடுங்கிய மறையோர் உமாபதியார் திருமடம் சென்று கோயிற் புராணச் சுவடியுடன் உமாபதி சிவாசாரியாரையும் சிவிகையில் ஏற்றுவித்து, உரிய பல திருக்கோயிற் சிறப்புக்களுடன் பொன்னம்பலத்திற்கு அழைத்து வந்தனர். பொன்னம்பலத்தே பெருமான் முன்புபோற் காட்சி வழங்கினன். உமாபதி சிவாசாரியார் கோயிற் புராண அரங்கேற்றமும் குறைவின்றி நிகழ்ந்தது. 'உண்மை அன்புடையார் உறவையே இறைவன் விரும்பி எழுந்தருள்வான்' என்ற மெய்மையை வையகம் அறிந்திட இந்த வரலாற்று நிகழ்ச்சி ஒரு நல்ல வாய்ப்பாயிற்று.

இவ்வாறு பல அற்புதங்கள் நிகழ்ந்தன; உமாபதி சிவாசாரியாரும் அருணமச்சிவாயர் முதலிய மாணாக்கர் பலர்க்கும் ஞான உபதேசம் செய்து கொண்டும், பல உயர்ந்த பனுவல்களை அருளிச் செய்து கொண்டும் வாழ்ந்தனர். சிவப்பிரகாசம் முதலிய எட்டு நூல்கள் இவராற் செய்யப் பெற்றுள்ள சாத்திரப் பனுவல்கள். 'பௌட்கரம்' என்ற ஆகமத் துணை நூலிற்கு ஓர் அழகிய விருத்தியுரையை உமாபதியார் வரைந்துள்ளனர். திருமுறை கண்ட புராணம் முதலிய தனிநூல்களும் இவரால் எழுதப்பட்டுள்ளன. திருத்தொண்டர் புராணசாரம் என்ற நூல் பெரிய புராணத்தின் பிழிவாக நின்று கற்போர் சிந்தைக்குக் களிப்பூட்டுகின்றது.

இறையடி நீழல் :

இவர் இறைவன் திருவடி நீழல் எய்தியமை ஒரு சித்திரைத் திங்களில் அத்த விண்மீன் கூடிய நாளில் என்றுரைப்பது மரபு.

உண்மை ஞானத்தால் விளைந்த இன்பத்தினுல் அடியார்கள் பலரும் போற்றிப் பரவிட இறைவன் திருவடித் தாமரைகளை எய்தி, எல்லையில்லாத நிறைவும், என்றும் ஒரே தன்மையும் உள்ள 'சுத்த அத்துவித ஆனந்த' வடிவம் ஆகி நின்ருர் என்று இவருடைய முத்திப் பேற்றை வரலாற்று நூலாசிரியர் சுவைபடக் கூறியுள்ளார். அத்திருப்பாட்டுப் பின்வருமாறு :

"சத்திய ஞான னந்தத் தத்துவ அனுபவத்தால்,
பத்திசெய் அடியார் போற்றப் பரனடிக் கமலம் எய்தி
நித்திய சுபாவ முத்த நிராகார பூர்த்தி யான
சுத்த அத் துவிதானந்த சொருபமே ஆகி நின்ருர்."

(தொடரும்)

சிவனடியார் வரலாறு

நன்னெறிகாத்த சேதிநாதனார்

மயிலைவாணன்

சேதி நாட்டுக்குத் தலைநகர் திருக்கோவலூர். மலையமான் திருமுடிக்காரி வழிவந்த மன்னர் ஒருவர் ஆண்டுவந்தார். நீதிநெறிவழுவாமல் அரசுபுரிந்தார். சிவனடியார்களைச் சிவன் எனவே கொள்ளும் சிந்தையுடையவர். மெய்ப் பொருள் நாயனார் என்றே அழைக்கப்பெற்றார். அடியார்களுக்குக் குறைவறக் கொடுத்துவந்தார். முத்தநாதன் என்ற வேற்றரசன் ஒருவன் இவருடன் பலமுறை போர்செய்து தோற்று அவமானப்பட்டுப் போனான். வஞ்சனையால் வெல்ல எண்ணினான். மெய்யெலாம் திருநீறு பூசிக்கொண்டான். குறுவாளை மறைத்துவைத்த புத்தகப் பையுடன் திருக்கோவலூரையடைந்தான். அரண்மனையின் பலவாயில்களைக்கடந்து மன்னன் சயனஅறையை அடைந்தான். தத்தன் என்ற காவலன் "இறைவன் துயில்கின்றார் பார்க்கும் சமயமில்லை" என்றான். அவனையும்மீறி உள்சென்றான் அக்கள்வன். படுத்திருந்த மன்னனுக்குப் பக்கத்து அமர்ந்திருந்த அரசி அரசனை எழுப்பினாள். அரசன் எழுந்து வணங்கினான். முத்தநாதன் "உலகில் இல்லாத ஆகமநூல் ஒன்று கொண்டு வந்திருக்கிறேன். நீயும்நானுமாகத் தனியேயிருந்து கேட்க வேண்டும்" என்றான். அரசியும் அகன்றாள். மன்னன் நூலைச் சொல்லும்படி கேட்டு வணங்கினான். வஞ்சகன் புத்தகம் எடுப்பவன்போல் வாளைஎடுத்து எண்ணியபடி முடித்தான். நாயனார் இரத்தம்சிந்த வீழ்ந்தார். தத்தன் முத்தநாதனைக் கொல்ல முனைந்தான். மலாடர்கோமான் தடுத்து "தத்தா! இவர் நம்மவர். ஒரு இடையூறும் வராமல் கொண்டுபோய் விட்டுவா" என்றார். தத்தனும் அவ்வாறே செய்து மீண்டு வந்து அரசருக்கு அறிவித்தபின், எல்லோரையும் திருநீற்றன்பு பாதுகாத்துய்யும்படி கூறி இறைவன் திருவடி நீழல்எய்தினார்.

"வெல்லுமா மிகவல்ல மெய்ப்பொருளுக்கு அடியேன்"

—சுந்தரர்.

குறிப்பு: 20-11-73 அன்று வரும் மெய்ப்பொருள் நாயனர் திருநட்சத்திரத்தையொட்டி வெளியிடப்பெற்றது.